# ''ஓம் சாயி ராம்''

## கர புதுவருஷ விடயம்

''ஜனனி ஜன்ம சௌக்யானாம் வர்த்தனீ குல ஸம்பதாம்
பதவீ பூர்வ புண்ணியானாம் லிக்யதே ஜன்ம பத்ரீகா''




க.ரவீந்திரன்
86, விபுலாநந்த வீதி
காரைதீவு - 01 (கி.மா.)
☎ : 0673670251
📱 : 0775915463
www.karaitivu.org
www.karaitivu.com

*Type Setting by : T.Kirinivasan B.Sc., PGDE, ICDL.*

## திருக்கணிதப் பஞ்சாங்கப்படி
## *கர வருஷப்பிறப்புக் கருமம்*

**கர** வருஷம் சித்திரை மாதம் 1-ம் திகதி (14-04-2011) வியாழக்கிழமை பகல் உதயாதி நாழிகை 17.25, பகல் மணி 01.00 இல் **"கர"** என்னும் பெயருடைய புதுவருஷம் பிறக்கின்றது. அன்று நட்சத்திரம் மகம் 2-ம் பாதம், திதி வளர்பிறை ஏகாதசி, அமிர்தயோகம். இது 60 வருட சுற்று வட்டத்தில் 25 ஆவது வருஷமாகும். காலை நாழிகை 7.25 (மணி 09.00) முதல் நாழிகை 27.25 (மணி 05.00) வரையும் மேட சங்கிரமண புண்ணியகாலம் ஆகும். வருஷம் பிறக்கும்போது உதயலக்கினம் "கடகம்" ஆக அமைகின்றது.

புதுவருட தினமாகிய சித்திரை 1-ம் திகதி (14-04-2011) வியாழக்கிழமை அதிகாலையில் சகலரும் சங்கற்பபூர்வமாக மருத்து நீர் வைத்து தலையில் கொன்றையிலையும், காலில் புங்கமிலையும் வைத்து ஸ்நானஞ்செய்து, மஞ்சள் நிற பட்டாயினும் அல்லது மஞ்சள்கரை வைத்த வெள்ளைப் புது வஸ்திரமாயினுந் தரித்து, புஸ்பராகம் சேர்த்து இழைக்கப்பட்ட ஆபரணங்களையணிந்து, நித்திய கர்மானுஷ்டானம் முடித்து, கண்ணாடி, தீபம், பூரண கும்பம் முதலிய மங்கலப் பொருட்களைத் தரிசித்து, விநாயகர் முதலிய இஷ்டகுல தெய்வங்களைத் தரிசனம் செய்து, புதுவருட சூரியனுக்கு பொங்கல், வழிபாடுகள் செய்து, இயன்ற தானாதிகள் வழங்கி, குரு, பெற்றோர் முதலிய பெரியோர்களை வணங்கி, அவர்கள் ஆசிபெற்று, பிதிர் விரதானுசாரிகள் சிரார்த்தம், தர்ப்பணம் என்பன செய்து, நண்பர்கள், விருந்தினர்களை வரவேற்று, உபசரித்து, சுற்றத்தினருடன் இருந்து பால், தயிர், தேன், வேம்பம்பூ முதலியவற்றுடன் அறுசுவைப் பதார்த்தங்களையும் போஜனஞ் செய்து, தாம்பூலமருந்தி, சுகந்த சந்தன புஸ்பாதிகளையணிந்து, புதுப்பஞ்சாங்க பலன்களைக்கேட்டு புதுவருடத்தில் ஆற்றக்கூடிய நற்கருமங்களைச் சிந்தித்து மங்களகரமாக வாழ்வார்களாக.

**சங்கிரம தோஷ நட்சத்திரங்கள் :** அசுவினி, மகம், பூரம், உத்தரம் 1ம் கால், மூலம், உத்திராடம் 2ம், 3ம், 4ம் கால்கள், திருவோணம், அவிட்டம் 1ம், 2ம் கால்கள்.

புதுவருடப்பிறப்பு : 14-04-2011 வியாழக்கிழமை
நேரம் : பகல் 01 மணி
புண்ணியகாலம் : காலை 9.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை
கைவிசேடம் : 14-04-2011 வியாழன்
பகல் 12.02 முதல் 01.14 வரை
மாலை 06.02 முதல் 07.38 வரை
இரவு 08.26 முதல் 10.02 வரை

**மருத்துநீர் :** தாழம்பூ, தாதுமாதுளம்பூ, தாமரைப்பூ, துளசி, வில்வம், அறுகு, பால், கோமயம், கோசலம், கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், மஞ்சள், சுக்கு, திற்பலி ஆகியவற்றை சுத்த ஜலத்தில் இட்டுக் காய்ச்சிய கஷாயமாகும். பூவகை கிடையாவிடில் அவைகளின் இலை, பட்டை, வேர், கிழங்கு யாதாயினும் உபயோகிக்கலாம்.

## வாக்கிய பஞ்சாங்கப்படி
## *கர வருஷப்பிறப்புக் கருமம்*

கலியுகாதி சுத்ததினம் *18667200*, நாடி *13* விநாடி *38*, தற்பரை *45*க்குச் சரியான **கர U சித்திரை t 1 S (*14–04–2011*) வியாழக்கிழமை முற்பகல் நாடி நாடி *13* விநாடி *39* (மணி *11.33*)ல்** பூருவபக்ஷ ஏகாசித் திதியில், மக நக்ஷத்திரத்தின் மூன்றாம் பாதத்தில் கண்டம் நாம யோகத்தில், விட்டிக்கரணத்தில், மிதுன லக்கினத்தில், மேட நவாம்சத்தில், சந்திரன் கால வோரையில் புதன் சூக்குமவோரையில், சாத்விக குணவேளையில் நக்ஷத்திர பக்ஷியாகிய ஆந்தை நடைத்தொழிலும் சூக்குமபக்ஷி உண்டித்தொழிலும் செய்யுங் காலத்தில் இப்புதிய **கர வருஷம்** பிறக்கின்றது. அன்று முற்பகல் நாடி *3* விநாடி *39* (மணி *7.33*) முதல் அன்று பிற்பகல் நாடி *23* விநாடி *39* (மணி *3.33*) வரை விஷபுண்ணிய காலமாகும்.

இப்புண்ணியகாலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்பித்து ❋ மருத்துநீர் தேய்த்து, சிரசில் கடப்பமிலையும் காலில் கொன்றையிலையும் வைத்து ஸ்நானஞ் செய்து பொன்நிறமான பட்டாடையாயினும், பச்சைக்கரையமைந்த புதிய பட்டாடையாயினும் உடுத்து, புஸ்பராகம், பச்சை மரகதம் இழைத்த ஆபரணமணிந்து வழிபாடு செய்க.

| | | |
|---|---|---|
| புதுவருடப்பிறப்பு | : | 14-04-2011 வியாழக்கிழமை |
| நேரம் | : | பகல் 11.33 மணி |
| புண்ணியகாலம் | : | காலை மணி 7.33 முதல் மாலை 3.33 வரை |
| கைவிசேடம் | : | 14-04-2011 வியாழன்<br>பகல் 11.37 முதல் பகல் 12.02<br>பகல் 12.14 முதல் பகல் 01.27<br>பகல் 04.22 முதல் பகல் 07.29<br>மாலை 6.42 முதல் மாலை 07.29<br>இரவு 07.41 முதல் இரவு 08.11 |

## கர வருஷ கிரகணங்கள்

- வைகாசி மாதம் 18ந் திகதி (01-06-2011) புதன்கிழமை **பார்சுவ சூரிய கிரகணம்.** இலங்கையில் தோற்றாது.
- ஆனிமாதம் 01ந் திகதி (15-06-2011) புதன்கிழமை இரவு **பூரண சந்திர கிரகணம்.** இலங்கையில் தோற்றும். இரவு 11.52 முதல் பின்இரவு 3.33 வரை.

  தென்னாபிரிக்கா, மோரிஸ், இலங்கை, பர்மா, மலேசியாவில் தோன்றும்.

| காலம் | தென்னாபிரிக்கா | மோரிஸ் | இலங்கை | பர்மா | மலேசியா |
|---|---|---|---|---|---|
| பரிசம் | 8-23 | 10-23 | 11-53 | 12-53 | 2-23 |
| ஆரம்பம் | 9-23 | 11-23 | 12-53 | 1-53 | 3-23 |
| அத்திமம் | 10-12 | 12-12 | 1-42 | 2-42 | 4-12 |
| முடிவு | 11-02 | 1-02 | 2-32 | 3-32 | 5-02 |
| மோசஷம் | 12-02 | 2-02 | 3-32 | 4-32 | 6-02 |

**கிரகண தோஷ நட்சத்திரங்கள் :** அசுவினி, பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம் 1ம், 2ம் கால்கள், ஆயிலியம், மகம், விசாகம் 4ம் கால், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம் 1ம் கால், ரேவதி, அன்று சூனிய திதியாவதால் சிராத்தம் இல்லை.

- ஆனி மாதம் 17ந் திகதி (01-07-2011) வெள்ளிக்கிழமை **பார்சுவ சூரிய கிரகணம்.** இலங்கையில் தோற்றாது.
- கார்த்திகை மாதம் 9ந் திகதி (25-11-2011) வெள்ளிக்கிழமை **பார்சுவ சூரிய கிரகணம்.** இலங்கையில் தோற்றாது.
- கார்த்திகை மாதம் 24ந் திகதி (10-12-2011) சனிக்கிழமை மாலை **பூரண சந்திர கிரகணம்.** இலங்கையில் தோற்றும். இரவு 6.15 முதல் இரவு 9.48 வரை. மோரிஸ், இலங்கை, பர்மா, மலேசியா, பீஜியில் தோன்றும்.

| காலம் | மோரிஸ் | இலங்கை | பர்மா | மலேசியா | பீஜி |
|---|---|---|---|---|---|
| பரிசம் | ........ | 6-14 | 7-14 | 8-44 | 11-44 |
| ஆரம்பம் | ........ | 7-34 | 8-34 | 10-04 | 1-04 |
| அத்திமம் | ........ | 7-59 | 8-59 | 10-29 | 1-29 |
| முடிவு | 6-55 | 8-25 | 9-25 | 10-55 | 1-55 |
| மோசஷம் | 8-15 | 9-45 | 10-45 | 12-15 | 3-15 |

**கிரகண தோஷ நட்சத்திரங்கள் :** கார்த்திகை 2ம், 3ம், 4ம் கால்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1ம், 2ம் கால்கள், அத்தம், சித்திரை 3ம், 4ம் கால்கள், சுவாதி, விசாகம் 1ம், 2ம், 3ம் கால்கள், திருவோணம்.

பூரணை சிராத்தம் மறுநாள் செய்க.

## பொதுப்பலன்

இவ்வருடம் கடகலக்கினத்தில் பிறக்கிறது. பொது மக்களுக்கு அதிக நன்மைகள் கிட்டுவது கடினம். பிரயாணங்களில் இடையூறுகள், விமான விபத்துக்கள், அக்கினி சம்பந்தமான அழிவுகள் ஏற்படலாம்.

உயர் பதவிகளில் இருப்பவர்களுக்கு கஸ்டங்கள் ஏற்படலாம். தாய்க் குலத்தோருக்கு பல கஸ்டங்களும், திருமணத் தடைகளும், விவாகரத்துக்களும் காட்டும்.

கல்விக் கூடங்கள், கலாசாலைகள், பல்கலைக் கழகங்கள் சிறப்பாக இயங்கும். மதவழிபாடுகள், விழாக்கள் சிறப்பாக நடைபெறும். விவசாயத் துறை சிறப்படைந்து பயிர் விருத்தியாகும். களியாட்டங்கள், அரங்கேற்றங்கள் கூடுதலாக நடைபெறும்.

நாட்டில் கலகங்கள், எதிர்ப்புகள், சண்டைகள் குறையும். நல்ல மழை பெய்து பயிர்ச் செழிப்பு உண்டாகும். மத சம்பந்தமான கருமங்களில் மக்கள் அதிகமாக ஈடுபடுவார்கள்.

உயர் பீடத்தினர் மக்களுடன் சிநேகமாகப் பழகுவார்கள். மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நடவடிக்கைகள் தொடரும். மத ஸ்தாபனங்கள் மத குருமார் கௌரவிக்கப்படுவார்கள்.

நாட்டில் கல்வித்துறை மேன்மையடையும், மாணவர்கள் கல்வித் துறையில் ஊக்கம் காட்டுவார்கள் ஆசிரியர்கள் நன்மதிப்பைப் பெறுவர்.

மழைவீழ்ச்சி மத்தியமாகும். மேகங்கள் வடக்குத் திசையில் உற்பத்தியாகி காற்றினால் அடித்து செல்லப்படுவதால் சிதறுண்டு தொட்டம் தொட்டமாக மழை பெய்யும். இதனால் சில இடங்களில் அதிக அழையும், சில இடங்களில் மழைக் குறைவும் காணப்படும். நாடெங்கும் நல்ல மழை பெய்து தானிய விளைவு சிறக்கும்.

நாட்டில் காலமழை பொழியும். வயல் நிலங்கள் நன்கு விளையும். நாட்டில் சகல பொருட்களும் (வெங்காயம், மிளகாய், கிழங்கு, எள்ளு, உழுந்து, கடலை, வரகு) அதிகமாகும். நல்ல கிராக்கி ஏற்படும். கைத்தொழில்கள் விருத்தியாகும். அபிவிருத்திக்கு நல்ல சந்தர்ப்பங்கள் கிட்டும். இரும்பு, பித்தளை, ஈயம் என்பன விலை குறையும். பொன், வெள்ளி முதலியன தாராளமாகக் கிடைக்கும்.

பலத்த காற்றினால் கட்டிடங்கள், உயர்ந்த மரங்கள் சேதமடையும்.

## மேடராசி

**(அசுவினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம்)**

மனம் அறிந்து பேசுவதில் வல்லமையும், துணிச்சலான முடிவு எடுக்கும் தைரியமும், உலக நடப்புக்களை அறிந்து கொள்ளும் ஆர்வம் நிறைந்த மேட ராசி அன்பர்களே! இவ்வருடம் 08-05-2011இல் தேகம், குணம், லட்சணம் ஆகிய உங்கள் ராசிக்கே குரு வருவதால் வாழ்க்கை மிகவும் துன்பம் சூழும். நோய் பிடிக்கும். பணவிரயம், வீண் கவலை, வீண் அலைச்சல் முதலியன ஏற்படும். செய்தொழில் ஓரளவு கஸ்ட நிலை ஏற்படும். மக்கள், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோர் ஆதரவும் தக்க தருணத்தில் உதவியும் கிடைத்து வரும். காலம் செல்லச் செல்ல புத்திரர் பாக்கியம் எதிர் கொள்வோருக்கு புத்திரர் கிட்டும். திருமண வாய்ப்புக் கிட்டும். குடும்பம் மிகுந்த மகிழ்ச்சியுடன் காணப்படும். இதனால் செயற்பாடுகளும் சிறப்பாக இருக்கும். தொழிலிலேயே நல்லதொரு முன்னேற்றம் ஏற்படும். பொருளாதாரம் மேன்மை அடையும். சொத்துக்கள் சேரும். தந்தை வழியில் நன்மைகள் கிட்டும். குரு செலவுத் தானாதிபதியாக இருப்பதால் பல வழிகளிலும் செலவு ஏற்பட இடமுண்டு. குறிப்பாக புத்திரர், கணவன் அல்லது மனைவி, தந்தை ஆகிய வழியில் செலவுகள் அதிகமாக இடமுண்டு. ஆரம்பத்தில் கடுமையாகவும் காலஞ் செல்லச் செல்ல பல நன்மையான காரியங்கள் நடைபெறும். முன்பிருந்த கஸ்டங்கள் நீங்கும். நன்மை உண்டாகும்.

மாணவர்களுக்கு கல்வியில் கஸ்ட நிலை காணப்படும். காலம் செல்லச் செல்ல முன்னேற்றம் காணப்படும். பரீட்சையில் சித்தி கிடைக்கும். ஆரம்பத்தில் கல்வியில் கூடிய விழிப்புணர்வுடனும் கவனத்துடனும் இருந்தாக வேண்டும்.

இவ்வருடமும் சனி ரோகம், சத்துரு, கடன் ஆகிய 6ல் தொடர்ந்து நிற்பதால் கடன் தொல்லைகள் அதிகமாகும். பகை ஓரளவு நீங்கும். தேக சுகம் பாதிக்கப்படும். வாய்வு பிடிப்பு, வாத சம்பந்தமான துன்பம், கை கால் எலும்பு முறிவு அல்லது சுழுக்கு, நரம்புத் தளர்ச்சி என்பன துன்பம் தரும். தவறி விழல், விபத்து என்பவற்றில் கவனம் தேவை. ''கெட்டவன் கெட்டிட ராஜயோகமாம்'' என்ற முதுமொழிக்கேற்ப தீயபலன் ஒழிந்து நற்பலன் ஏற்படும். செல்வச் செழிப்பு ஆரோக்கியம், அனைவருடனும் நல்லிணக்கம் ஆகியவற்றை பெறக்கூடிய ஆண்டு. ஒரு யோகமான வருடம் அதிஷ்டகரமான வருடம். சொந்த வீடு இல்லாதவர்களுக்கு வீடு வாங்கும் யோகம் அமையும். செய் தொழிலில் இதுவரை இருந்த மந்த நிலை நீங்கி வெற்றியும் முன்னேற்றமும் கிடைக்கும். எதிரிகள் பணிவார்கள். செல்வம் செல்வாக்கு அதிகரிக்கும். எதிர்பாராத வகையில் தனலாபம் ஏற்படும். 15-11-20011ற்குப் பின் பலனில் குறைவு ஏற்படும்.

இவ்வருடமும் ராகு 9ம் இடத்தில் தந்தை பாக்கியத் தானத்தில் தொடர்ந்து நிற்பதால் பெரும்பாலும் கஸ்டத்தைத் தரும். சகல விடயங்களிலும் கஸ்டம் ஏற்படும். பணச் செலவு, அலைச்சல் ஏற்படும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. தந்தையின் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும். கணவன் மனைவி உறவு நன்றாக இருக்கும். இளைய சகோதரர் சுகக் குறைவு உண்டாம். மாணவர்களுக்கு உயர் கல்வியில் விரும்பமின்மை ஏற்படும். உயர் கல்வியில் கூடிய கவனம் தேவை.

இவ்வருடமும் கேது 3ம் இடத்தில் இளைய சகோதரம், போசனத் தானத்தில் தொடர்ந்து நிற்பதால் ''கெட்டவன் கெட்டிட ராஜயோகம்'' என்பதற்கேற்ப நல்ல காலம் உதயமாகும். துன்பங்கள், வறுமைகள் அகலும். நோய்கள் அகன்று குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வரவுக்கு மேல் செலவு இருக்கும். இளைய சகோதரரின் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும். அதனால் செலவுகள் அதிகமாகும். எச்சரிக்கை தேவை. தோல் சம்பந்தமான துன்பம் ஏற்படும்.

இதுவரையும் குரு, சனி, ராகு, கேது என்பவற்றின் மாற்றத்திற்கான தனித்தனி பலனை அறிந்த நீங்கள் இவை நான்கு பலனும் எப்படி இருக்கும் என்று பார்ப்போம். நற்பலன்கள் கிட்டும். தொழில் விருத்தி, குடும்ப வருமானம் நன்றாக இருக்கும். தேகசுகம் பாதிப்படையமாட்டாது. உத்தியோகத்தர்களுக்கு மேலிடத்து உதவிகள் உண்டு. வியாபாரிகளுக்கு தொழில் சீராக நடக்கும். வருமானம் பெருகும். முதலீடுகள் நன்கு விற்பனையாகும். திருமணத்தை எதிர் நோக்குவோருக்கு கருமங்கள் கைகூடக்கூடிய வாய்ப்புண்டு. மாணவர்களுக்கு கல்வி சிறப்பாக அமையும்.

15-11-2011ல் சனி களத்திரதானத்திற்கு மாறுவதனால் முன்கூட்டியே சுபகாரியங்கள் செய்வது நல்லது. குடும்பத்தில் பல பிரச்சினைகள் உருவாகும். உடல் நலம் பாதிக்கப்படும்.

## இடபராசி

**(கார்த்திகை 2,3,4ம் பாதங்கள், ரோகினி, மிருகசீரடம் 1,2ம் பாதங்கள்)**

நடை உடை பாவனையில் தனித்துவத்துடன் செயற்பட்டு பிறரை வசீகரிப்பது பெண்கள் மீது அதிக இரக்க குணம் கொண்ட இடபராசி அன்பர்களே! இவ்வருடம் 08-05-2011இல் விரையம், தேசசஞ்சாரத் தானமான 12இற்கு வருவதால் மிகப்பெரிய நன்மைகளை எதனையும் செய்து விடாது. மிகப் பெரிய செலவுகளை ஏற்படுத்தும். மனக் கசப்பினை ஏற்படுத்துகிற சம்பவங்கள் சில ஏற்படுவதற்கான வாய்ப்பிருக்கிறது. நன்மைகள் சற்று குறைவாக நடைபெறுவதற்கான வாய்ப்புகளும் அவ்வப்போது ஏற்படும். செய்தொழிலிலும் அமைதி இருக்காது. வரவிற்கு மேல் செலவு அதிகரித்துக் கொண்டிருக்கும். மங்களகரமான காரியங்களுக்குச் செலவு ஏற்படும். தாயின் தேகசுகம் பாதிக்கப்படும். செலவு அதிகமாகும். வீடு, வாகனம், பயிர், நிலம் என்பன துன்பம் தரும். சுகக் குறைவு ஏற்படும். பெரும்பாலும் மூச்சுத் திணறல், ஞாபக மறதி, அஸ்த்மா போன்றவை துன்பம் தரலாம். அவதானமாக இருக்க வேண்டும். தாமதித்தால் வருந்த நேரிடும். அதிக செலவு ஏற்படும். மரண பயம், விபத்து என்பன துன்பம் தரும். கணவன் மனைவி உறவு நன்றாக அமையும். வெளிநாடு செல்ல

இருப்போருக்கு வாய்ப்புக் கிட்டும். தடை ஏற்படாமலே சித்தியாகும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காணப்படும். மத்திய கல்வி மிக நன்றாக அமையும். கல்விக்காக அதிக செலவு ஏற்படும்.

இவ்வருடமும் சனி புத்திரர் தாய்மாமன் தானமான 5ல் தொடர்ந்து இருப்பதால் புத்திரர் பாக்கியம் தாமதமாகும். புத்திரர் சுகக் குறைவு ஏற்படும். தொழில் முன்னேற்றம் மிகச்சிறப்பாக இருக்கும். தொழில் முயற்சியில் உள்ளோருக்குத் தொழில் கிட்டும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். சுயதொழில் புரிபவர்களுக்கு பெரிய முன்னேற்றமும் லாபமும் ஏற்படும். தொல்லைகள் அகலும். நோய்கள் அகலும். மணமாகாதவர்களுக்கு தாமதமாகும். கணவன் மனைவி உறவு பாதிக்கப்படும். எதிர்பாராத வகையில் சொத்துக்கள் சேரும். குடும்ப உறவு பாதிக்கப்படும். தாய் மாமனுக்கு தேக சுகம் பாதிக்கப்படும். முன்னேற்றம் தடைப்படும். கஸ்ட நிலை காணப்படும் மாணவர்களுக்கு ஓரளவு நன்மை ஏற்படும். இருப்பினும் கல்விக்கேற்ப நன்மை கிட்டும். உயர் கல்வியில் பெரும் நன்மை ஏற்படும்.

இவ்வருடமும் ராகு ஆயுள்தானமான அட்டமத்தில் நிற்பதால் தனக்குரிய பலனை காட்டாமல் விடமாட்டார். கஸ்ட பலனே அதிகமாகும். தீமை செய்யும் சக்தியே மேலோங்கி நிற்கும். எதிலும் கவனமாக இருக்க வேண்டும். நிலம், சொத்து, வீடு, வாகனம் என்பன விடயங்களில் அவதானமாகவும், வாதவிவாதம், வழக்கு தவிர்த்தல் நன்று. தேவையற்ற விரோதம், காரணமே இல்லாமல் கோபிப்பர். தோல், நரம்பு, விஷம் சம்பந்தமான துன்பம் ஏற்படும். மனநோய், விஷநீர், விபத்து, விஷ பயம் என்பன துன்பம் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் நாட்டம் குறைவடையும் கல்வி அடிக்கடி பாதிக்கப்படும். கல்வியில் கூடிய கவனம் தேவை.

இவ்வருடமும் கேது தனம், வாக்கு, கல்வித் தானமான 2ல் தொடர்ந்து இருப்பதால் குடும்பத்தில் உற்சாகமின்மையும் கவலையும் காணப்படும். குடும்ப சுகம் பாதிக்கப்படும் குடும்ப ஒற்றுமை குன்றிக் காணப்படும். தெய்தொழிலில் முழுக்கவனத்ததையும் செலுத்தி எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். செய்தொழிலில் ஓரளவு ஆதாயம் கிடைக்கும். வரவு தாமதமாகும். தனதானிய விருத்தி குறைவடையும். பேச்சில் நிதானமாக இருக்க வேண்டும். இனசன விரோதங்கள் ஏற்படலாம். மாணவர்கள் கல்வியில் ததும்பல் நிலை காணப்படும். கல்வியில் நிதானம் தேவை.

இது வரையும் குரு, சனி, ராகு, கேது என்பவற்றின் தனித்தனிமாற்ற பலனை அறிந்த நீங்கள் இவை நான்கு பலனும் எப்படி இருக்கும் என்று பார்ப்போம். நற்பலன்களை எதிர்பார்க்கக்கூடியதாக இருக்காது. உழைப்புக்கேற்ற ஊதியம் கிடையாதுபோதல், குடும்பசுகம், தேகசுகம் இடையிடையே பாதிக்கப்படும் எதிர்பார்த்த கருமங்கள் கைகூடாது. உத்தியோகத்தர்களுக்கு முன்னேற்றங்கள் தாமதமாகும். வேலைப்பழு அதிகமாகும். அதிகாரிகளுக்கேற்ப நடந்து கொள்வது நன்று. வர்த்தகர்களுக்கு எதிர்பார்த்த லாபம் கிடையாது. பொருளாதார நிலை மந்தமாகவே இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் பின்னடைவு ஏற்படும். 15-11-2011இல் சனி ரோகத்தானத்திற்கு மாறுவதால் தேகசுகம் பாதிக்கப்படும். ஆனாலும் நன்மை கிட்டும். யோககாரகனாக இருப்பதால் பல நன்மையே கிட்டும்.

## மிதுனராசி

**(மிருகசீரிடம் 3,4ம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3ம் பாதங்கள்)**

முன்னேற்றம் மிக மிக சிறப்பாக இருக்கும். உயர் கல்விக்கான வாய்ப்புகள் கிடைக்கும். கல்வியால் பெருமையடைவீர்கள்.

இவ்வருடமும் சனி தாய், சுகத்தானத்தில் தொடர்ந்து நிற்பதால் உடல் நலத்தில் அக்கறை காட்டவேண்டும். நூதனமான நோய்கள் ஏற்படலாம். அலட்சியம் கூடாது. மனக்கவலை அளவுக்கதிகமாக இருக்கும். வரவுக்கு மேல் செலவு ஏற்படலாம். தாய்க்கு

சுகக்குறைவு காணப்படும். செய்தொழில் அவ்வப்போது சலசலப்பு ஏற்பட்டு மறையும். வீடு, வாகனம், மனை, நிலம், பயிர் என்பன பலவிதமான கஸ் உயர்வான சிந்தனைகள் மனதில் நிகழ்த்தச் செயல்படுவதுடன் புத்திசாலித்தனம் பிறருக்கு யோசனையும் சொல்லும் மிதுன ராசி அன்பர்களே! இவ்வருடம் 08-05-2010இல் லாபத்தானம் மூத்த சகோதரத்தானமான 11இற்கு வருவதனால் செய்தொழிலில் முன்பிருந்த கஸ்டங்கள் நீங்கும். செய்தொழிலில் முன்னேற்றம் மிக அற்புதமாக இருக்கும். வரவேண்டியிருந்த தொகை கைக்கு வரும் ஆரோக்கியத்தில் செய்தொழிலில், பொருளாதாரத்தில் மேன்மைகள் உருவாகும். காலம் செல்லச் செல்ல மேலும் மிகமிகச் சிறப்பான அற்புதமாதாக விளங்கும். உடல் நலிவு, மருத்துவர்களாலேயே இனம்கண்டறிய முடியாத புதுப்புது உடல் உபாதைகள் இருப்பின் அவை முற்றிலுமாக குணமாகும். குடும்பமும் குடும்ப வாழ்க்கையும் மகிழ்ச்சிகரமாக அமையும். வாழ்க்கைத் துணையின் ஆரோக்கியம் மேன்மை அடையும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணத்திற்கான நேரம் வந்து விட்டது என்பதை உறுதியாகச் சொல்லலாம். இல்லறம் நல்லறம் காணும். கணவன் மனைவியிடையே பிரிவு அல்லது தொழில் நிமிர்த்தம் பிரிந்து வாழ்ந்தவர் அல்லது தொழில் நிமிர்த்தமாக வெளியூரில் சென்றவர்கள் கணவனும் மனைவியும் ஒன்று சேரும் சூழல் உருவாகும். நல்லுறவு நீடிக்கும். மூத்த சகோதரர்களின் நற்பலன் குறைவாக காணப்படும். தேகசுகம் பாதிக்கப்படும். அலைச்சல் கவலை உண்டாம். மாணவர்களுக்கு கல்வி டங்களைத் தரும். குடும்ப உறவு நன்றாக அமையும். கணவன் மனைவி உறவு நன்றாக அமையும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடைபெறும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். மத்திய கல்வியில் ஓரளவு கஸ்டநிலை காணப்படும். மத்திய கல்வியில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். உயர்கல்வி நன்றாக அமையும்.

இவ்வருடமும் ராகு களத்திரத்தானமான 7ல் நிற்பதால் கணவன் அல்லது மனைவி, மக்கள் பற்றிய கவலை ஏற்படும். சிலவேளை நோய் பீடித்து வாட்டும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். இதனால் தொழில் பாதிக்கப்படும். மேலதிகாரிகளின் சீற்றம் வலுக்கும். செலவுகள் அதிகரிக்கும். தீய காரியங்களில் ஈடுபடத் தூண்டும். எதிலும் நிதானமாக செயற்பட வேண்டும். மாணவர்கள் கல்வியில் கவனம் தேவை. கணவன் அல்லது மனைவி மக்கள் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படலாம்.

இவ்வருடமும் கேது, தேகம், குணம், லட்சணம் தானமான ஜன்ம ராசியில் நிற்பதால் நன்மையும் தீமையும் கலந்தே நடைபெறும். வறுமையும் துன்பமும் கவலையும் நிலவும். குடும்பத்தில் ஒருவர் நோய்வாய்ப்படுவர் அல்லது துக்கரமான சம்பவங்கள் ஏற்படலாம். தேகசுகம் பாதிக்கப்படும். பித்த மயக்கம், மூளைக்குழப்பம், தோல் வியாதி, விஷபயம் என்பன துன்பம் தரலாம். செய்தொழிலில் மந்த நிலை நிலவும். தொழிலில் கெட்ட பெயர், வீண் அலைச்சல் ஏற்படும். தீயவர்கள் வாழ்க்கையில் நுழைய சந்தர்ப்பம் உண்டு. காரியங்களை நிதானமாக செய்வது நன்று. கணவன் மனைவி உறவு பாதிக்கப்படும். பிற்பகுதியில் மகிழ்ச்சி நிலவும். கணவன் அல்லது மனைவி உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும். மாணவர்கள் கல்வியில் பாதிக்கப்பட இடமுண்டு. கல்வியில் கூடிய இடமுண்டு.

இதுவரையும் குரு, சனி, ராகு, கேது என்பவற்றின் தனித்தனி மாற்ற பலனை அறிந்த நீங்கள் இவை நான்கு பலனும் எப்படி இருக்கும் என்று பார்ப்போம். பொதுவாக நற்பலன்களை எதிர்பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. குடும்ப நிலை சிறப்பாக இருக்கும். பொருளாதாரம் சிறப்படையும். தொடங்குங் கருமங்கள் தங்கு தடையின்றி நிறைவேறும். இனபந்துக்களால் உதவி உண்டு. உத்தியோகத்தர்களுக்கு மேலிடத்து ஆதரவு கிட்டும். சம்பள உயர்வுகளும் கிட்டும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் விற்பனையாகி லாபம் கிட்டும். பழைய கடன் வசூலாகும். திருமணத்தை எதிர்நோக்கி இருப்போருக்கு கருமம் கைகூடும். வாழ்க்கை மகிழ்ச்சியாக அமையும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றமும் பரீட்சையில் சித்தியும் உண்டு.

15-11-2011இல் சனி புத்திரதானத்திற்கு வருவதனால் புத்திரர் பற்றிய கவலை ஏற்படும். புத்திரபாக்கியம் பின்தள்ளிப்போகும். பலவிதமான கஸ்டங்கள் ஏற்படும்.

## கர்கடகராசி

**(புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயிலியம்)**

நல்ல விஷயங்களில் நாட்டம் கொண்டு பொதுநல அக்கறையும் மக்கள் கவர்ச்சியும் கொண்ட கர்கடகராசி அன்பர்களே! இவ்வருடம் தொழில்தானமான 10இற்கு 05-08-2011இல் வருவதால் பொருளாதார நிலை பொதுவில் நன்றாக அமையும். வேற்று நண்பர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் சுமூகமாக நடைபெறும். வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக இருக்கும். கணவன் மனைவி உறவு நன்றாக அமையும். வாழ்க்கையில் வளமும் செல்வச் செழிப்பும் ஏற்படுகின்ற ஆண்டு இது. ஆரோக்கியத்தில் நிலவி வந்த சிறுசிறு குறைகள் நீங்கும். கண் தொடர்பான சிறு உபாதைகளுக்குச் சிகிச்சை மூலம் நலம் காண்பீர்கள். திருமணமாகி பல வருடங்களாகியும் குழந்தைக்கான வாய்ப்பும் இருக்கிறது. ஆண் குழந்தை ஏற்பட இடமுண்டு. திருமண வயதிலுள்ளவர்களுக்கு திருமணம் நடைபெறுவதற்கான வலுவான வாய்ப்புகள் காணப்படுகின்றன. 10இல் குரு பதவியை பறிக்கும் என்பார்கள். என்பதற்கமைய மிகப் பெரிய பாதிப்புக்கள் ஏற்படவிடினும் சிறுசிறு பிரச்சினைகள் உருவாகிட வாய்ப்பிருக்கின்றது. உத்தியோகத்திலும் சிறு இடையூறுகள் ஏற்படாமற் போகாது. எனவே தொழில் அவதானம் தேவை. முக்கால் பங்கு கழிய நிலைமையில் அபிவிருத்தி ஏற்படும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம் சிறந்து விளங்கிடும் ஆண்டு. கல்வித்திறன் நன்கு வெளிப்படும். குடும்பத்தாரையும் ஒருசேர பெருமைப்படுவர்.

இவ்வருடமும் சனி இளையசகோதரம், போசனத் தானமான 3இல் தொடர்ந்து நிற்பதால் விரோதிகள் அழிவார்கள். நண்பர்கள், உறவினர்கள் உதவ முன்வருவார்கள். உடல் ஆரோக்கியம் அபிவிருத்தியடையும். செலவுகள் குறைவடையும். பொருளாதார நிலை நல்ல நிலையில் காணப்படும். குடும்பத்தில் ஒரு புதிய ஜீவன் தோன்றும். புத்திரருக்கு தேகசுகக் குறைவு ஏற்பட இடமுண்டு. எடுத்த காரியங்கள் வெற்றியை அளிக்கும். செய்தொழிலில் ஆதாயத்தைத் தரும். மனக் கவலைகள் அகன்று மகிழ்ச்சி ஏற்படும். மேற்படிப்புக்கு வசதி உண்டாகும். உதவியும் ஆதரவும் கிடைக்கும். கணவன் மனைவி உறவில் மகிழ்ச்சி நிலவும். மாணவர்களுக்கு கல்வி நல்லபடி அமையும். உயர்கல்வியில் ஓரளவு மந்த நிலை காணப்படும். ஆனாலும் பாதிப்பு ஏற்படாது. இளையசகோதரர்கள் தேகசுகம் பாதிக்கப்படும். அதனால் செலவுகள் ஏற்படும். அலைச்சலும் ஏற்படும். பூர்வீக சொத்துக்கள் வரவேண்டி இருந்தால் கிட்டும். போசனத்தில் திருப்தி இன்மை ஏற்படும் அகாலபோசனம் கிட்டும்.

இவ்வருடமும் ராகு ரோகம், கடன், சத்துரு தானமான 6இல் தொடர்ந்து நிற்பதால் ‘‘கெட்டவன் கெட்டிட ராஜயோகமாம்‘’’ என்ற முதுமொழிக்கேற்ப சகல துறைகளிலும் நன்மை ஏற்படும். குடும்பத்தில் ஆதரவு, மகிழ்ச்சி, பெரியோர் சந்திப்பு, வெளியூர் பிரயாணங்கள் தேடிவரும். கணவன் மனைவி உறவு மகிழ்ச்சிகரமாக இருக்கும். எதிரிகள் அதிகமாகும். எதிரிகளால் துன்பம் ஏற்படும். தீயவர்கள் நுழைய இடமுண்டு. தேகசுகம் பாதிக்கப்படும். மனநோய், குடல் சம்பந்தமான கோளாறு, மலச்சிக்கல், வாய்வுபிடிப்பு, நீர் சம்பந்தமான துன்பம் விஷம், விஷநீர், தோல் வியாதி என்பன துன்பம் தரும். இதனால் வைத்தியச் செலவு அதிகமாகலாம். கடன் தொல்லை ஏற்படும். கடன்பட வேண்டிய வரும். தீயவர் வழியில் செலவு அதிகமாகும். கணவன் மனைவி மக்கள் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும். பாரிய செலவுகளையும் பல வழிகளில் ஏற்படுத்தும். மாணவர்களுக்கு அவ்வப்போது கல்வி பாதிக்கப்படும்.

இவ்வருடமும் கேது செலவு, தேகசஞ்சாரம் தானமான 12இல் நிற்பதால் நல்ல பலன் நடைபெற்றாலும். உறவினர்களால் தொல்லைகளும் கவலைகளும் இருந்து வரும். வீண் அலைச்சலும் வேளைக்கு உணவு உண்ண முடியாமையும் சம்பவிக்கும். கெட்ட பெயரும் ஏற்படும். செலவு கட்டுக்கடங்காமல் அளவு மீறிப் போகும். தேகசுகம் பாதிக்கப்படும். பித்த

மயக்கம், மூளைக்குழப்பம் கஸ்டம் தரும். இதனால் செய்தொழிலில் கஸ்டம் ஏற்படும். மேலதிகாரிகளின் சீற்றத்துக்கு ஆளாக வேண்டி வரும். எச்சரிக்கையுடனும் பொறுமையுடனும் இருக்க வேண்டும். மாணவர்களுக்கு கல்வியில் விருப்பமின்மை ஏற்படும். கணவன் மனைவி உறவு நன்றாக அமையும். வெளிநாடு செல்ல விரும்புபவர்களுக்கு காரியம் கைகூடும். கணவன் அல்லது மனைவி மக்கள் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.

இதுவரையும் குரு, சனி, ராகு, கேது என்பவற்றின் தனித்தனி மாற்ற பலனை அறிந்த நீங்கள் இவை நான்கு பலனும் எப்படி இருக்கும் என்று பார்ப்போம். குடும்ப சுகம் குறையும், வைத்திய செலவுகள் அதிகமாகும். பொருளாதாரம் மந்தநிலை காட்டும். குடும்பத்தில் சச்சரவுகள் ஏற்படும். இடமாற்றமும் ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு அதிகமாகும். சக உதவிகளும் கிட்டாது. மேலதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாக வேண்டி வரும். பொறுமையைக் கடைப்பிடித்தல் நன்று. வர்த்தகர்களுக்கு முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். வங்கி நிலை மோசமாக இருக்கும். திருமணத்தை எதிர்பார்ப்போருக்கு கருமம் தடைப்படும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம் தடைப்பட்டவண்ண மிருக்கும். 15.12.2011இல் சனி 4க்கு மாறுவதால் சுகபோகமாக வாழ்க்கையில் கஸ்டம் ஏற்படும். குடும்ப சுகம் பாதிக்கப்படும். தாய்வழி கஸ்டம் ஏற்படும். வீடு, வாகனம், பயிர் நிலம் என்பன கஸ்டம் தரும். குடும்ப உறவு பாதிக்கப்படும். கணவன் மனைவி உறவு நன்றாக அமையும்.

### *சிங்கராசி*

### (மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம்)

தளராத நம்பிக்கையுடன் உழைத்து தகுந்த பலன் பெறுவதுடன் எடுத்த காரியத்தை முடிக்கும் வரை ஓயாத சிங்க ராசி அன்பர்களே! இவ்வருடம் அட்டமத்து குரு விலகி பாக்கியம், தந்தை தானமான 9க்கு 08.05.2011இல் வருவதாலும் உங்கள் ராசியைப் பார்ப்பதாலும் ''குரு பார்க்கின் கோடி புண்ணியமாம்'' என்பதற்கமைய நீண்ட காலமாக தொடர்ந்த பிரச்சினை மேல் பிரச்சினைதான் என்பதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தால் போல் குரு ஜெகஜோதியான ஆண்டாக அமையும். நினைத்த காரியங்கள் அனைத்தும் நடைபெறும். எடுத்த காரியங்கள் வெற்றியுடன் முடிவடையும். பிரயாணங்களில் அனுகூலங்களும் ஆதாயமும் இருக்கும். குடும்பத்தில் ஒரு புதிய ஜீவன் உதயமாகும். புத்திரர் பாக்கியம் எதிர்கொள்வோருக்கு புத்திரர் கிட்டும். திருமணத்தை எதிர்நோக்குவோருக்கு காரியம் கைகூடும். கணவன் மனைவி மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கும். சமூகத்தில் கௌரவம் நிலைக்கும். இதுவரை இருந்த கடன் தொல்லைகள் கவலைகள், கடன், மரணபயம், விஷபயம் அனைத்தும் அகலும். பொருள் சேர்க்கையும் கிட்டும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். பரீட்சையில் அதிசித்தி கிடைக்கும். உயர்கல்வியில் அதிசித்தி கிட்டும். தந்தை தேகசுகமும் நற்பலனும் உண்டாம். பூர்வீக சொத்துக்கள் கிடைக்க வாய்ப்புண்டு.

இவ்வருடமும் தனம், வாக்கு, வித்தைதானமான 2இல் சனி நிற்பதால் ஏழரைச்சனி கடைக்கூறு நடைபெறுகிறது. முன்பைவிட துன்பங்கள் சிறிது சிறிதாகக் குறையும். மனக்கவலைகள் அகலும். வீண்செலவு, வீண் அலைச்சல் தொடர்ந்து கஸ்டம் தரும். குடும்பத்தில் மங்களகரமான சம்பவங்கள் நடைபெறும். திருமணமாகாதவர்களுக்கு திருமணம் நடைபெறும். செய்தொழில் மாற்றம் ஏற்படலாம். புதிய தொழில் தொடங்க வழி பிறக்கும். தடைப்பட்டிருந்த தொழில் மீண்டும் புத்துயிர் பெறும். தொழிலில் நிலவிய தேக்க நிலை அகலும். தடைகள் அகலும். நிதி பற்றாக்குறை எனும் பேச்சுக்கு இனி இடமிருக்காது. பேச்சில் நிதானமாக நடந்து கொள்ள வேண்டும். வீண் வம்புகள் ஏற்பட இடமுண்டு. வாக்குறுதியில் அவதானம் தேவை. அரச ஊழியர்களுக்கு பகைமை அகலும். நன்மைகள் பல நடைபெறும். அரசாங்கத்திலே பணி புரிபவர்களுக்கு பதவி உயர்வு, உயர் பதவி, பாரட்டு என்பன கிடைக்கும். தொழிலை எதிர்பார்ப்போர் தொழில் கிட்டும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம் மிகச் சிறப்பாக இருக்கப்போகிற ஆண்டு. தடைப்பட்ட கல்வி கிடைக்கும். தற்பொழுது

35வயதுக்குட்பட்டவர்களுக்கு இரண்டாவது சனி பலத்த நன்மைகளைத் தரும். 65வயதுக்குட்பட்டவர்களுக்கு மூன்றாவது சனி தேகசுகக் குறைவையும் அதிக செலவையும் ஏற்படுத்தும். நீடித்த சுகக் குறைவாக காணப்படும்.

இவ்வருடமும் ராகு புத்திரர், மாமன் தானமான 5இல் நிற்பதால் உறவினருடன் ஏற்பட்ட மனத்தாக்கங்கள் அகலும். பொருளாதாரம் மேன்மை அடையும். செய்தொழிலில் நல்ல ஆதாயம் கிட்டும். மேலதிகாரிகளின் ஆரதரவு கிட்டும். வீணான கவலைகளும் அலைச்சலும் ஏற்படும். அதனால் வேளைக்குச் சாப்பாடு உண்ண முடியாமற் போகலாம். கணவன் மனைவி உறவு மகிழ்ச்சிகரமாக இருக்காது. புத்திரர் பற்றிய கவலை ஏற்படும். புத்திரரின் உடல் ஆரோக்கியம் குறைவு ஏற்படலாம். புத்திர பாக்கியம் பின் தள்ளிப் போகும். மாமனுக்கு பல கஸ்டங்கள் ஏற்படும். கணவன் மனைவி சுகக்குறைவு ஏற்படும்.

இவ்வருடமும் கேது மூத்த சகோதரர் லாபத்தானமான 11இல் நிற்பதால் பல வகையான கஸ்டம் ஏற்படும். செய்தொழிலில் மந்த நிலையில் காணப்படும். வரவு தாமதமாக கிட்டும். வீடு, வாகனம், பயிர், நிலம் என்பவற்றால் கஸ்டம் ஏற்படும். அன்னிய பொருள் குறைவடையும். கணவன் மனைவி உறவு பாதிக்கப்படும். மூத்த சகோதரருக்கு சுகக் குறைவு ஏற்படும். முன்னேற்றம் தடைப்படும். விஷம் சம்பந்தமான துன்பம் ஏற்படும்.

இதுவரையும் குரு, சனி, ராகு, கேது என்பவற்றின் தனித்தனி மாற்ற பலனை அறிந்த நீங்கள் இவை நான்கு பலனும் எப்படி இருக்கும் என்று பார்ப்போம். குடும்பததில் மகிழ்ச்சி நிலவும். தேகசுகம், குடும்பசுகம் நன்றாக அமையும். வெளிநாடுகளிலிருந்து சுபசெய்தி கிட்டும். பொருளாதார நிலை நன்று. உத்தியோகத்தர்களுக்கு தொழில் துறைகளில் பல வசதிகள் கிடைக்கும். அதிகாரிகளின் நன்மதிப்பைப் பெறுவர். ஐப்பசி மாதத்தின் மேல் பதவி உயர்வுகள் தேடிவரும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் லாபகாரமாக விற்பனையாகும். வருட பிற்பகுதி முதலீடுகளுக்கு நன்று. வருட பிற்பகுதியில் மங்கல கருமங்கள் நிறைவேற வாய்ப்புண்டு. மாணவர்களுக்கு வருட பிற்பகுதியில் கல்வி முன்னேற்றமும் சித்தியும் உண்டு.

15.11.2011இல் சனி 3ம் இடம் செல்வதால் சொல்ல முடியாத கஸ்டங்களை அனுபவித்த உங்களுக்கு பல நன்மைகள் வந்தடையும். கஸ்டங்கள் நீங்கும். தடைப்பட்டவை கிடைக்கும். 30வயதைத் தாண்டியவர்களுக்கு மேலும் நன்மை கிட்டும்.

## கன்னிராசி

**(உத்தரம் 2,3,4ம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2ம் பாதங்கள்)**

சூழ்நிலைகளுக்கு ஏற்ப தன்னை பக்குவப்படுத்திக் கொள்ளுவதுடன் முன் எச்சரிக்கையும் செயல் திறமையும் நிறைந்த கன்னிராசி அன்பர்களே! இவ்வருடம் குரு அட்டமத்தானத்திற்கு 08.05.2011இல் வருவதால் சற்று கடினமானதாக இருக்கும். முக்கிய பணிகளை காலம் தாமதிக்காமல் முடித்துக் கொள்வது நல்லது. முதலீடுகள் செய்வதில், வீடு கட்டுவது, திருமணம் முடிப்பது போன்ற பணிகளை தாமதிப்பது நல்லதல்ல. ஆரோக்கியத்திலும் பின்னடைவு ஏற்படும். இருதயநோய் தொடர்பான பாதிப்புகள் ஏற்படலாம். அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள வேண்டி ஏற்படலாம். தீய எண்ணங்கள் ஆட்கொள்ளும். ஆயுதங்களால் காயங்கள், விபத்துக்கள், எதிர்பாராத செலவினங்கள் முதலியவற்றில் அவதானமாக இருக்க வேண்டும். எச்சரிக்கையுடனும் பொறுமையுடனும் இல்லாவிட்டால் உறவுகளில் விரோதம் ஏற்படும். தேவையில்லாத விரோதம், காரணமில்லாமல் சிலர் கோபிப்பார்கள். திருமண வாய்ப்பிருப்பவர்களுக்கு திருமணம் தாமதமாகும். அல்லது நிச்சயிக்கப்பட்ட குறிப்பிட்ட மாதத்தில் திகதியில் நேரத்தில் திருமணம் நடைபெற முடியாதவாறு ஒரு சில பிரச்சனைகள் தோன்றி அதனால் பாதிப்புகள் ஏற்படலாம். குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்படும். முறை தவறி செல்லவும் இடமுண்டு. மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் குறைவடையும். கல்வி தடைப்படும். கல்வியில் கூடிய கவனம் தேவை. தேகசுகம் பாதிக்கப்படும். பெரும்பாலும் வயிற்றுப் பகுதியில் நோய் தாக்கங்கள் ஏற்படலாம். குடல், கிட்னி தொடர்பான பிரச்சினை ஏற்படலாம். பெண்களாயின் கர்ப்பம் சம்பந்தமான துன்பம் ஏற்படலாம்.

இவ்வருடமும் சனி தேகம், குணம், லட்சணத்தனமான ஜென்மத்தில் நிற்பதால் குரு பார்வை அகலுவதாலும் நற்பலன் அனுபவித்து வந்த உங்களுக்கு இவ்வருடம் சற்று

கடினமானதாக இருக்கும். உடல் ஆரோக்கியம் கெடும். செய்தொழிலில் ஆதாயமும் உற்சாகமும் குறைவடையும். பணத்தட்டுப்பாடு தலைக்கு மேல் போகும். வறுமை அளவு மீறியிருக்கும். நண்பர்கள் உறவினர்கள் விரோதம் ஏற்படும். குடும்பத்தில் துக்ககரமான சம்பவங்கள் நிகழலாம். பிரயாணங்கள் அவ்வளவு நல்ல பலனைத் தராது. குடும்பத்தில் அவ்வளவு கஸ்டம் இருந்தபோதிலும் ஓரளவு மனநிம்மதியும் மகிழ்ச்சியும் நிலவும். கணவன் மனைவி உறவு நல்ல விதமாக அமையும். தீய சக்திகள் உறவில் ஊடுருவும். தீய நடத்தைகள் தீய வழிகள் காணப்படும். விஷபயம், மரணபயம் என்பன துன்பம் தரும்.

இவ்வருடமும் ராகு தாய், சுகபோகத்தானமான 4இல் தொடர்ந்து நிற்பதால் தேகசுகம் பாதிக்கப்படும். விஷம், விஷம் சம்பந்தமான துன்பம் ஏற்படும். பல வழிகளிலும் கஸ்டம் ஏற்படும். கணவன் மனைவி உறவு நன்றாக அமையும். செலவு அதிகமாகும். பெரியோர் ஆதரவு கிட்டும். தொழில் நல்லபடி அமையும். வெளியூர் பயணம் ஏற்படும். ஸ்தல யாத்திரை செய்யவும் வாய்ப்பு உண்டு. ஆடம்பரச் செலவு அதிகமாகும். ஆடம்பரச் செலவுகளை குறைத்தல் நன்று. வீடு, வாகனம், நிலம், பயிர், ஆபரணம் என்பவற்றால் கஸ்டமும் செலவும் ஏற்படும். தாய்க்கு நல்ல பலன் குறைவடையும், தாயின் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும். மாணவர்களுக்கு கல்வியில் பாதிப்பு ஏற்படும். வசதிகள் குறைவடையும். மத்திய கல்வியில் பாதிப்பு ஏற்படும்.

இவ்வருடமும் கேது தொழில்த்தானத்தில் 10இல் தொடர்ந்து நிற்பதால் செய்தொழில் பாதிப்பு ஏற்படும். வரவு தாமதமாகும். மேலதிகாரிகளின் சீற்றத்துக்கு ஆளாக வேண்டி வரும். செ்தொழில் மாற்றம் அல்லது இடமாற்றம் என்பன ஏற்படலாம். வாழ்க்கை முன்னேற்றம் தடைப்படும். அன்னிய பொருள் சேரும். கணவன் மனைவி ஒற்றுமை ஏற்படும். குடும்ப உறவு நன்றாக அமையும்.

இதுவரையும் குரு, சனி, ராகு, கேது என்பவற்றின் தனித்தனி மாற்ற பலனை அறிந்த நீங்கள் இவை நான்கு பலனும் எப்படி இருக்கும் என்று பார்ப்போம். ஏழுரைச் சனியும், அட்டமத்து வியாழனும் இவ்வருடம் முழுவதும் இருப்பதால் ஒரு சோதனைக் காலமாக அமையும். தசாபுத்தி நன்மையாக இருந்தால் நற்பலன் உண்டு. குடும்பத்தில் தொடங்கும் கருமங்கள் நிறைவேறாது. பொருளாதாரம், தேகசுகம் பாதிக்கப்படும். கடன் தொல்லைகளும் தலைதூக்கும். இறைவழிபாட்டைச் செய்யவும். உத்தியோகத்தர்களுக்கு தொழில் ஸ்தாபனத்தில் பல சிக்கல்கள் தோன்றும். அதிகாரிகள் சீறி விழுவார்கள். வசதி குறைந்த இடமாற்றம் கிடைக்கலாம். திருமணத்தை எதிர்நோக்குவோருக்கு கருமம் கைகூடாது. நினைவுகள் கானல் நீராகவே இருக்கும். வியாபாரிகளுக்கு தொழில் நட்டத்திலேயே நடக்கும். முதலீடுகளைத் தவிர்க்கவும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் இராது. சோம்பல் தன்மை மிகும்.

15.11.2011இல் சனி 2இற்கு வருவதால் கஸ்டங்கள் ஓரளவு நீங்கும். பொருளாதாரம் சீரடையும். வரவு தாமதமாகும். வாக்குகளில் அவதானம் தேவை. கல்வியில் பாதிப்பு ஏற்படும். ஆரம்பக் கல்வியில் கூடிய கவனம் தேவை. சோம்பல் தன்மை மிகும். குடும்பத்தில் ஒற்றுமை குறைவடையும். பேச்சில் அவதானமாக இருக்க வேண்டும். தலை சம்பந்தமான சுகக்குறைவு ஏற்படும்.

## துலாராசி

**(சித்திரை 3,4ம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3ம் பாதங்கள்)**

தர்மம் தலைகாக்கும் என்ற நம்பிக்கையுடன் அறச் செயல்ககளில் ஈடுபட்டு எந்தக் காரியத்தையும் எளிமையாகச் செய்யும் துலாராசி அன்பர்களே! இவ்வருடம் 08.05.2011இல் களத்திரத்தானத்திற்கு வருவதாலும் ராசியைப் பார்ப்பதாலும் இதுவரை இருந்த வந்த கஸ்டங்கள் மேல் கஸ்டங்கள் எல்லாம் ஒரு முற்றுப் புள்ளி வைத்தால் போல் சிறந்த ஆண்டாக திகழும். அரசாங்க ஆதரவு கிடைக்கும். பெரியோர் சந்திப்பு ஏற்படும். சமூகத்தில் கௌரவம் அதிகரிக்கும். தேகசுகம் விருத்தியடையும். கடன் சுமை விலகும். பகைமை விலகும். செய்தொழிலில் நல்ல ஆதாயமும் உற்சாகமும் உண்டாகும். கணவன் மனைவி உறவு

நன்றாக அமையும். மணமாகாதவர்களுக்கு மணமாகும். குடும்பத்தில் ஒரு புதிய ஜீவன் உதயமாகும். புத்திரபாக்கியம் எதிர்கொள்வோருக்கு புத்திரர் கிட்டும். கணவன் மனைவி மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம் சிறந்து விளங்கிடும் ஆண்டு. கல்வித்திறன் நன்பு வெளிப்படும் உங்கள் குடும்பத்தவரை பெருமைப்படுத்துவீர்கள்.

இவ்வருடம் சனி செலவு, தேசசஞ்சாரத் தானத்திற்கு நிற்பதாலும் ஏழரைச்சனி ஆரம்பிக்கும் 12இல் நிற்பதால் கஸ்டநிலை காணப்படும். உழைப்பிற்குக் கிடைக்க வேண்டிய ஊதியத்தைக்கூட அரும்பாடுபட்டுத்தான் பெற வேண்டும். அரச ஊழியர்களுக்கு நன்மைகள் நடைபெறும். அதேசமயம் வேளைப்பளு அதிகரிக்கும். பணவிரயம் ஏற்படும். குடும்பத்தில் அமைதி குலையும். மக்களால் கவலை ஏற்படும். நோய் தொல்லை தரலாம். ஆனால் நண்பர்கள் உறவினர்கள் உதிவியாலும் ஆதரவாலும் மனதிற்கு ஒருவித நிம்மதி கிடைத்து வரும். செய்தொழிலில் முழுக்கவனத்தையும் செலுத்தி கூடுமானவரை பொறுமையுடன் கண்காணித்துவர பெரிய இழப்புகளிலிருந்து விடுபடலாம். உடல்நலத்தை கவனத்துடன் கவனிக்க வேண்டும். மூன்றாவது சனியாயில் உடல் நலத்தில் கூடிய கவனம் தேவை. (60வயதுக்குப் பின்) இரும்பு சம்பந்தமான பொருட்களால் துன்பம் ஏற்படும். செலவுகள் ஏற்படும். கணவன் மனைவி உறவு நன்றாக அமையும். மக்கள் உதவி புரிவார்கள். திருமணத்தை எதிர்கொள்வோருக்கு காலதாமதமாகும். கருமங்கள் கைகூடுவது கடினம். இழுபறிநிலை தோன்றும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் குறையும். கல்வியில் ஊக்கம் தேவை. சனி உச்சம் பெறுவதாலும் யோக காரகனாக இருப்பதால் கஸ்டபலன் குறைவடையும். ஏழரைச்சனி பாதிப்பு குறைவடையும்.

இவ்வருடம் ராகு சகோதரர், போசனத்தானமான 3இல் தொடர்ந்து நிற்பதால் இளைய சகோதரர்களுக்கு சுகக்குறைவு ஏற்படும். இளைய சகோதரர்களுக்கு உடல் வலிமை குன்றும். தொல்லைகளும் பொருட் செலவுகளும் ஏற்படும். இளைய சகோதரர்களுக்கு வீண் அலைச்சலும் கவலையும் இருந்த வரும். பணத்தட்டுப்பாடும் தலைக்குமேல் போகும். ராகு 3இல் நிற்பதால் வரவு தாமதமாகும். வேளைக்கு உணவு உண்ண முடியாத நிலை ஏற்படும். வேலைப்பளு அதிகமாகும். கணவன் மனைவி உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும். பலன் மந்த நிலை காணப்படும்.

இவ்வருடம் கேது தந்தை, பாக்கியத்தானமான 9இல் தொடர்ந்து நிற்பதால் பெற்றோரின் உடல்நிலை பாதிக்கப்படும். தந்தையின் உடல்நிலை பாதிக்கப்படும். மருத்துவத்திற்கான பணச்செலவு அதிகமாகும். செய்தொழிலில் பெரிய நன்மை ஏற்படும். பொருளாதாரம் நல்லபடி அமையும். பொருள் வரவு நன்றாக அமையும். வாகனம், வீடு, நிலம், பயிர், பூர்வீக சொத்து என்பன துன்பம் தரும். பிரச்சினை தரும். கணவன் மனைவி உறவு நன்றாக அமையும். மாணவர்களுக்கு கல்வியில் பின்னடைவு ஏற்படும். உயர்கல்வி பாதிக்கப்படலாம். கூடிய கவனம் தேவை.

இதுவரையும் குரு, சனி, ராகு, கேது என்பவற்றின் தனித்தனி மாற்றபலனை அறிந்த நீங்கள் இவை நான்கு பலனும் எப்படி இருக்கும் என்று பார்ப்போம். வருட ஆரம்பம் நன்றாக இருக்கும். 08.05.2011க்குப் பின் குருவின் சுகம் உண்டு. ஏழரைச்சனி நடந்தாலும் சனி யோக காரணாகவும் உச்ச வீடாகவும் விளங்குவதால் கஸ்டபலன் இல்லை எனலாம். வருடம் முழுவதும் வியாழசுகம் உண்டு. குடும்பநிலை மகிழ்ச்சிகரமாக இருக்கும். தேகசுகம் பாதிக்காது. தொழில் மூலம் வருவாய் அதிகரிக்கும். வீட்டில் சுபநிகழ்வுகள் நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு வசதிகள் பெருகும். அதிகாரிகளின் நட்பும் கிட்டும். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் குறிப்பிடத்தக்க இலாபம் உண்டு. வங்கி நிலை சிறப்பாக இருக்கும். புதிய தொழில் ஆரம்பிக்க நன்று. மங்கல கருமத்தை எதிர்நோக்குவோருக்கு கருமங்கள் கைகூடும். மாணவர்களுக்கு கல்வி விருத்தி, விளையாட்டுக்களில் பரிசில்கள் கிடைக்கும்.

15.11.2011இல் சனி உங்கள் ராசிக்கே வருவதால் ஜன்மச் சனி நடக்கும். ஜன்மச் சனியாக இருந்தபோதும் உங்களுக்கு தீமை செய்யமாட்டார். பல வழிகளிலும் நன்மை கிட்டும்.

## விருச்சிகராசி

**(விசாகம் 4ம் பாதம், அனுஷம், கேட்டை)**

எந்தச் சூழலிலும் கலங்காத உள்ளம் படைத்தும், கொண்ட கொள்கையை செயல்படுத்த அயராது பாடுபடும் விருச்சிகராசி அன்பர்களே! இவ்வருடம் குரு ரோகம், சத்துரு,

கடன் தானமான 6இல் 08-05-2011இல் நிற்பதால் ஆரோக்கியத்தில் பாதிப்பு ஏற்படும். அஜீரணக் கோளாறுகள், மூச்சுத் திணறல் அஸ்த்மா, ஞாபகமறதி என்பன உண்டாம். ஆரோக்கியத்தில் கவனம் எடுத்துக் கொள்ளுதல் அவசியம். தொல்லைகள் அதிகரிக்கும். பணக் கவலைகள் எப்போதும் வாட்டிவரும். நெருக்கமானவர்களுடன் சில மனஸ்தாபங்கள் மனத்தாங்கல்கள் ஏற்படலாம். பொருளாதாரம் சிறப்பாக அமையும். தொழில் நஸ்டம் ஏற்படும். மிகவும் எச்சரிக்கையுடன் இல்லாவிட்டால் நண்பர்கள், உறவினர்களிடம் விரோதம் ஏற்படும். குடும்ப உறவு பாதிக்கப்படும். கொடுக்கல் வாங்கலில் கவனமாக இருக்க வேண்டும். கடன் திரும்பாது.

இவ்வருடம் சனி லாபம், மூத்த சகோதரத்தானமான 11இல் தொடர்ந்து நிற்பதால் எண்ணியவை கூடும். செய்தொழிலில் அதிக நன்மைகள், பொருள் சேர்க்கையும் கிட்டும். ஆனால் எல்லாம் தாமதமாகும். விரோதிகளும் நண்பர்களாவார்கள். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். பொருளாதாரம் மந்தமடையும். கடும் உழைப்பால் பொருள் சேர்க்கை நன்றாக அமையும். நண்பர்கள் இயன்ற உதவிகளைச் செய்வர். பெரிய விபத்துக்கள் நடைபெற்றாலும் தீமைகள் எதுவும் பெரிய அளவில் ஏற்படாது. நன்மையும் தீமையும் சேர்ந்தே காணப்படும். புத்திரர் வழியில் பிரச்சினைகள் ஏற்படும். புத்திரர் எதிர்கொள்வோருக்கு புத்திரர் பாக்கியம் பின் தள்ளிப் போகும். சகோதரருக்கு கஸ்டநிலை காணப்படும். மூத்த சகோதரருக்கு அதிகஸ்டம், பிரச்சினைகள் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காணப்படும். பரீட்சையில் சித்திகளும், பாராட்டுக்களும் பரிசில்களும் கிடைக்கும். திருமணத்தை எதிர்நோக்குவோருக்கு கடும்முயற்சி மூலம் கிட்டும். கணவன் மனைவி உறவு நன்றாக அமையும்.

இவ்வருடமும் ராகு தனம் வாக்கு கல்வித்தானமான 2இல் நிற்பதால் சகல துறைகளிலும் கஸ்டம் ஏற்படும். குடும்ப உடல் நிலை பாதிக்கப்படும். தனதானிய விருத்தி பாதிக்கப்படும். வார்த்தை கடினமாக இருக்கும். அவதானமாக வார்த்தையை பேசவேண்டும். செய்தொழிலில் கூடிய கவனம் தேவை. வரவு தாமதமாகும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். குடும்ப மகிழ்ச்சி குறைவடையும். கணவன் அல்லது மனைவி உறவில் விரிசல் ஏற்படும். மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வி பாதிக்கப்படும்.

இவ்வருடமும் கேது அட்டமத்தில் தொடர்ந்து நிற்பதால் பல வழிகளிலும் கஸ்டங்கள் ஏற்படும். செலவினங்கள் அதிகமாகும். கணவன் அல்லது மனைவியின் உறவில் விரிசல் ஏற்படும். இதனால் கெட்ட பெயர் ஏற்படும். செய்தொழிலில் மனஅமைதி குலையும். உழைப்பு கடினமாகும். ஊதியம் குறைவடையும். எதிர்பாராத துன்பங்கள் ஏற்படும். மிகவும் எச்சரிக்கையுடன் இல்லாவிட்டால் வருந்த நேரிடும். தீயவர் நட்பு தவிர்த்தல் நல்லது. விபத்துக்கள் ஏற்படும். அவதானம் இல்லாவிட்டால் வருந்த நேரிடும். மாணவர்களுக்கு கல்வி பாதிக்கப்படும். விஷம் சம்பந்தமான துன்பம் ஏற்படும்.

இதுவரையும் குரு, சனி, ராகு, கேது என்பவற்றின் தனித்தனி மாற்றபலனை அறிந்த நீங்கள் இவை நான்கு பலனும் எப்படி இருக்கும் என்று பார்ப்போம். வருடஆரம்பம் நன்றாக இருந்தாலும் 08.05.2011க்குப் பின் குருவின் சுகம் குறைய ஆரம்பிக்கும். தேகசுகம் இடையிடையே குறைந்தாலும் பெரிய தாக்கம் இல்லை. பணச்செலவு சற்றுக் கூடுதலாகவே இருக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப்பழு கூடுதலாகவே இருக்கும். சக உதவிகள் உண்டு. பதவி உயர்வுகள் எதிர்பார்க்க முடியாது. வர்த்தகர்களுக்கு எதிர்பார்த்த லாபம் கிடையாது. வங்கி நிலையும் சிறப்பாக இராது. திருமணத்தை எதிர்நோக்கியிருப் போருக்கு பல இழுபறிகள் தோன்றும்.

15.11.2011இல் ஏழரைச்சனி ஆரம்பிப்பதால் நற்பலன்கள் மேலும் குறைவடையும். பலவிதமான கஸ்டங்கள், பொருட்செலவு, அலைச்சல், சுகக்குறைவு என்பன துன்பம் தரும். கல்வி ஊக்கம் தேவை.

## தனுராசி

**(மூலம், பூராடம், உத்தராடம் 1ம் பாதம்)**

தானும் நன்மை செய்து மற்றவர்களையும் நன்மை செய்ய வைக்கும் நற்குணம் படைத்த தனுராசி அன்பர்களே! இவ்வருடம் புத்திரர், பூர்வபுண்ணியம் மாமன் தானமான 5இற்கு 08.05.2011இல் வருவதாலும், ராசியைப் பார்ப்பதாலும் ‘‘குரு பார்க்கின் கோடி புண்ணியமாம்’’

என்பதற்கமைய நல்லதொரு ஆண்டாக அமைகிறது. பொருளாதாரம் நல்லபடி அமையும். அரச ஊழியர்களுக்கு மிகப்பெரிய பொறுப்புக்கள் கிட்டும். கடந்த ஆண்டு பட்ட துன்பங்களுக்கெல்லாம் ஒரு முடிவு ஏற்படும். நண்பர்கள், உறவினர்கள், மேலதிகாரிகள் ஆகியோர் ஆதரவும் உதவியும் கிடைக்கும். ஒரு புதிய ஜீவன் உதயமாகும். புத்திரபாக்கியம் எதிர்கொள்வோருக்கு புத்திரர் கிட்டும். பதவி உயர்வு கிட்டும். பொருளாதார நிலையில் அபிவிருத்தி ஏற்பட்டு புதுமனை, பயிர், நிலம் ஆகியவை நன்மை ஏற்படும். கணவன் மனைவி உறவு மகிழ்ச்சி தரும். கொடுக்கல் வாங்கல்கள் திருப்திகரமாக இருக்கும். மாணவர்களுக்கு கல்வியிலே கிடைப்பதற்குரிய மிகப் பெரிய வெற்றிகளைப் பெறுகிற ஆண்டாக அமையும். கல்வியால் புகழ் பெறுவீர்கள்.

இவ்வருடமும் சனி தொழில்தானமான 10இல் நிற்பதால் செய்தொழிலில் ஓரளவு முன்னேற்றம் ஏற்படும். இருந்தும் கஸ்டநிலை ஏற்படும். சக ஊழியர்கள் எதிகளாவர். மேலதிகாரிகளின் சீற்றத்துக்கு ஆளாக வேண்டி வரும். இடமாற்றமும் ஏற்படலாம். தொழிலுக்காக அதிக செலவு ஏற்பட இடமுண்டு. பணத்தட்டுப்பாடு குறையும். வாழ்க்கையில் முன்னேற்றங்களைச் சந்திப்பீர்கள். குடும்ப அங்கத்தினர்களினது ஒத்துழைப்பு முழுமையாகக் கிடைக்கும். பொருளாதாரம், ஆரோக்கியம், குடும்பம் அனைத்தும் முன்னேற்றம் ஏற்படும். குடும்பசுகம் பாதிக்கப்படும். தாய்க்கு சுகக்குறைவு ஏற்படும் இதனால் அதிக செலவு ஏற்படும். திருமணத்தை எதிர்கொள்வோருக்கு தாமதமாகும். இழுபறிநிலை காணப்படும். கணவன் மனைவி உறவு நன்றாக அமையும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும்.

இவ்வருடமும் ராகு தேகம், குணம், லட்சண தானமான ஜென்ம ராசியில் நிற்பதால் தீமையும் நன்மையும் கலந்தே நடைபெறும். ஆரம்பத்தில் வறுமையும், துன்பமும், கவலையும் நிலவும். சகல துறைகளிலும் கஸ்டம் ஏற்படும். செய்தொழிலில் மந்த நிலை நிலவும். தொழிலில் கெட்ட பெயர், வீண் அலைச்சல் என்பன ஏற்படும். வாழ்க்கையில் தீயவர்கள் நுழைய சந்தர்ப்பம் ஏற்படும். காரியங்களை நிதானமாக செய்வது நன்று. குடும்பத்தில் ஒருவர் நோய்வாய்ப்படுவர் அல்லது துக்ககர சம்பவங்கள் நடைபெறலாம். உணவுக்கும் கஸ்டப்படும் நிலை ஏற்படலாம். ஆனாலும் உதவியும் மன அமைதியும் சிலரால் கிட்டும். கணவன் அல்லது மனைவி மக்கள் ஆதரவும் உதவியும் இருக்கும். குடல், நீர், விஷம் என்பன சம்பந்தமான துன்பம் ஏற்படலாம். திருமணம், கல்வி, புத்திரபாக்கியம் என்பன கஸ்டம் தருவனவாகவே இருக்கும்.

இவ்வருடமும் கேது களத்திரதானமான 7இல் நிற்பதால் கணவன் அல்லது மனைவிக்கு கஸ்டநிலை ஏற்படும். குடும்ப சுகம் பாதிக்கப்படும். உஷ்ணம், விஷம் சம்பந்தமான தீங்கு ஏற்படும். குடும்பத்தில் வறுமையும் நோயின் தொல்லையும் நிலவும். மற்றவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் அவமானம், பொருள் இழப்பு, வீண் விரோதம் முதலியவை ஏற்படும். தொழிலில் கவனம் செலுத்த முடியாத நிலை ஏற்படும். மணவாழ்க்கை, கல்வி, புத்திரபாக்கியம் என்பன கஸ்டநிலை தரும். காதல் வாழ்க்கையில் பிரிவு ஏற்பட இடமுண்டு.

இதுவரையும் குரு, சனி, ராகு, கேது என்பவற்றின் தனித்தனி மாற்றபலனை அறிந்த நீங்கள் இவை நான்கு பலனும் எப்படி இருக்கும் என்று பார்ப்போம். பலவகையாலும் சிறப்பான காலம். குடும்பஸ்தர்களுக்கு மகிழ்ச்சிகரமான காலம். தொழில் விருத்தியும் பொருளாதாரச் சிறப்பும் உண்டு. வெளிநாட்டிலிருந்து வருவாய் கிட்டும். வீட்டில் சுபநிகழ்வுகள் நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு தொழில் ஸ்தாபனத்தில் வரவேற்பு கிட்டும். உயரதிகாரிகளின் பாராட்டுக்களும், பதவி உயர்வுகளும் உண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் அமோகமாக நடக்கும். பணம் சேரும். வங்கிநிலை திருப்தியளிக்கும். புதிய முதலீடுகள் நன்று. மங்கல கருமங்களை எதிர்நோக்குவோருக்கு பலன் கிட்டும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்சியும் பாராட்டுகளும் பரிசில்களும் கிடைக்கும்.

15.11.2011இல் சனி 11க்கு வருவதால் பொருளாதாரம் சற்றுக் குறைவடையும். வரவு தாமதமாகும். மூத்த சகோதரர் சுகக்குறைவு, பலவழிகளிலும் கஸ்டம் என்பன காணப்படும். கடுமையாக உழைக்க வேண்டி ஏற்படும்.

## மகரராசி

**(உத்தராடம் 2,3,4ம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2ம் பாதங்கள்)**

கருணை நிறைந்த மனத்துடன் பிறருக்கு உதவும் எண்ணமும் எதையும் சாதிக்கும் திறமையும் கொண்ட மகரராசி அன்பர்களே! இவ்வருடம் குரு மாதா, வாகனம், வீடு, சுகத்தானமான 08.05.2011இல் 4இல் வருவதால் அரச பணிகளில் தீவிரமாகவும் துரிதமாகவும் செயல்பட வேண்டிய சூழல் உருவாகும். குறித்த காலத்தில் பணிகளை முடித்துக் கொடுக்கும் நிலை உண்டாகும். சில தடங்கல்களும் வீண் அலைச்சலும் இருந்து வந்தாலும் நினைத்ததை நடத்திக் கொள்வீர்கள். சொந்த வேலையைத் தள்ளிப்போட வேண்டி வரும். உங்களுக்கு கீழுள்ள பணியாளர்களின் உழைப்பு தேவை வரும். வாகனம், வீடு, பயிர், நிலம் என்பன கிட்டும் அல்லது அழகுபடுத்த வாய்ப்புக் கிட்டும். வீடு, வாகனம் தொடர்பான புதிய முயற்சிகளில் இறங்கினால் அது வெற்றியளிக்கும். ஆரம்பத்தில் தேகசுகம் பாதிக்கப்படும். மருந்துச் செலவு அளவு மீறிப் போகலாம். போகப் போக நலம் காண்பீர்கள். பெண்களுக்கு கர்ப்பப்பையில் குறைபாடுகளும் வைத்தியச் செலவும் கடன் பெறவும் நேரும். வெளியூர்ப் பயணம் இருக்கும். கல்வி சம்பந்தமான நல்ல முடிவு ஏற்படும். மேல்படிப்பு வசதி உண்டாகும். மத்திய கல்வி சிறப்பாக அமையும். கணவன் மனைவி உறவு மகிழ்ச்சிகரமாக இருக்கும். புது உறகளும் ஏற்படும்.

இவ்வருடமும் சனி பிதா, பாக்கியத்தானமான 9இல் நிற்பதால் உத்தியோகத்தில் இருப்பவர்களாயினும் சுயதொழில் செய்பவர்களாயினும் தொழில் மேன்மை ஏற்படும் அல்லது மாற்றம் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவு முதலியவை கிட்டும். தொழிலில் அவதானமும் உழைப்பும் தேவை. வெளியூர்ப் பிரயாணமும், கெட்ட பெயரும், பொருள் நட்டமும் ஏற்படும். குடும்பத்தில் சிலரை எச்சரிக்கையுடன் கவனித்து வரவேண்டும். அலட்சியம் கூடாது. பிதா சுகக் குறைவு ஏற்படலாம். பிதா வழி நன்மைகள் கிட்டும். பூர்வீகச் சொத்துக்கள் வரவேண்டியிருந்தால் கிட்டும். பிதா வழி பல உதவிகள் கிட்டும். நூதனமான, பழமை வாய்ந்த சொத்துக்கள் பொருட்கள் கிட்டும். கணவன் மனைவியிடையே கருத்து ஒற்றுமை நிலவும். குடும்பத் தேவை நிறைவேற்றுவீர்கள். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பர். கடின உழைத்து முன்னேறக்கூடிய வருடப் முயற்சிக்கேற்ற பலன் கிட்டும். மகரராசி சொந்த வீடாக இருப்பதால் கஸ்ட பலன்கள் குறைவு.

இவ்வருடமும் ராகு செலவு, தேச சஞ்சாரத்தானமான 12இல் நிற்பதால் உறவினர்களால் தொல்லைகளும் கவலைகளும் இருந்து வரும். குடும்பத்தில் விண் செலவும், வீண் அலைச்சலும், வீண் அபவாதமும் வேளைக்கு உணவு உண்ண முடியாமையும் சம்பவிக்கும். கெட்ட பெயரும் ஏற்படும். தேகசுகம் பாதிக்கப்படும். இதனால் தொழிலில் கஸ்டம் ஏற்படும். எச்சரிக்கையுடனும் பொறுமையுடனும் இல்லாவிட்டால் விபரீதமான நிகழ்ச்சிகளும் நடக்கலாம். விஷம் சம்பந்தமான துன்பம் ஏற்படும். கணவன் மனைவி உறவு நன்றாக அமையும். வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு காரியம் கைகூடும். மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் குறையும்.

இவ்வருடமும் கேது ரோகம், கடன், சத்துருத்தானமான 6இல் தொடர்ந்து நிற்பதால் ‘‘கெட்டவன் கெட்டிட ராஜயோகம்’’ என்ற முதுமொழிக்கேற்ப நல்ல பலன் உண்டாம். சகல துறைகளிலும் நன்மை ஏற்படும். குடும்பத்தில் ஆதரவு, மகிழ்ச்சி, பெரியோர் சந்திப்பு, வெளியூர் பிரயாணம் செய்தொழிலில் பல முன்னேற்றங்கள் உண்டாகும். கணவன் மனைவி உறவு நன்றாக அமையும். தீயவர்கள் வாழ்க்கையில் நுழைய இடமுண்டு. எதிரிகளால் துன்பம் ஏற்படும். தேகசுகம் பாதிக்கப்படும். பித்த மயக்கம், மனநோய், மூளைக்குழப்பம், தோல் வியாதி துன்பம் தரலாம்.

இதுவரையும் குரு, சனி, ராகு, கேது என்பவற்றின் தனித்தனி மாற்றபலனை அறிந்த நீங்கள் இவை நான்கு பலனும் எப்படி இருக்கும் என்று பார்ப்போம். இவ்வருடம் நன்மை தீமை கலந்த பலன்களே நடக்கும். குடும்பத்தவர்களுக்கு நிம்மதி குறைவாகவே இருக்கும். தேகசுகம் இடயிடையே குறைவடைந்தாலும் பாதிப்புகள் இல்லை. தொடங்குங் கருமங்கள் தாமதத்தின் பின்பே நிறைவுபெறும். அலைச்சல் மிகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. வேலைப்பழு அதிகமாகும். சக உதவிகள் உண்டு. சம்பள உயர்வுகள் தள்ளிக்கொண்டு போகும். வியாபாரிகளுக்கு விற்பனவு ஓரளவு நடக்கும். இலாபம்

அதிகம் இல்லாவிடினும் நட்டம் ஏற்படாது. புதிய முதலீடுகளைப் பின்தள்ளிப் போடுதல் நன்று. திருமணத்தை எதிர்நோக்குவோருக்கு தாமதத்தின் மேல் கருமம் கைகூடும். மாணவர்களுக்கு முயற்சி தேவை. முயற்சிக்கு ஏற்க முன்னேற்றமுண்டு.

15.11.2011இல் சனி 10இற்கு வருவதால் எதிலும் கவனமாக இருக்க வேண்டும். தொழிலில் கூடிய கவனமாக இருக்க வேண்டும். அலட்சியம் கூடாது. சட்டப்படி வேலைசெய்வது நல்லது. வேலைப்பழு அதிகமாகும். கடவுள் பக்தி நலம் தரும்.

## கும்பராசி

**(அவிட்டம் 3,4ம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ம் பாதங்கள்)**

வாழ்வில் உயர்ந்த நிலையில் இருந்தாலும் தன்னடக்கத்துடன் செயற்படுவதுடன் எதையும் இன்றே செய்ய வேண்டுமென்ற எண்ணம் கொண்ட கும்பராசி அன்பர்களே! இவ்வருடம் குரு சகோதரர் போசனத்தானமான 3இல் 08.05.2011இல் வருவதால் மிகக்குடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். செய்தொழிலில் தடங்கலும் வீண் கெட்ட பெயர் உண்டாகும். மேலதிகாரிகள் ஆதரவாக இருக்க மாட்டார்கள். பதவி உயர்வுகள் ஏற்பட வாய்ப்பிருக்காது. இடமாற்ம் முயன்றாலும் தவிர்க்க முடியாது. காலம் செல்ல நன்மை கிட்டும். உணவு சுவையான உணவு கிடைத்தாலும் நேரத்துக்கு உண்ண முடியாமை ஏற்படும். கணவன் மனைவி ஒற்றுமை நிலவும். திருமண முயற்சியில் ஈடுபட்டால் நன்மை உண்டாகும். வெளியூர்ப் பயணங்கள் இருக்கும். தந்தைக்கு சுகக்குறைவு ஏற்படும். காலம் செல்ல நன்மை உண்டாகும். குடும்பத்தில் நன்மை உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். இளைய சகோதரர்களுக்கு சுகக்குறைவும் அலைச்சலும் கவலையும் ஏற்பட இடமுண்டு.

இவ்வருடமும் சனி அட்டமத்தில் தொடர்ந்து நிற்பதால் சொல்லொணாத் துயரத்தைத் தருவார். செய்தொழில் இடையூறு ஏற்படும். மேலதிகாரிகள் சீற்றம் அடைவார்கள். வீண் கெட்ட பெயர், இடமாற்றம் ஏற்படும். அளவிட முடியாத அளவில் வார்த்தைகளால் விபரிக்க முடியாத வகையில் கஸ்ட நிலை ஏற்படும். கவலை, வீண் அலைச்சல், விஷபயம், மரணபயம், பொருள் இழப்பு, நண்பர்களால் தொல்லை, குடும்பத்தினரிடம் மனத்தாங்கல், விரக்தி ஆகியவற்றை எதிர்பார்த்தே ஆகவேண்டும். ஆரோக்கியத்திலும் ஒரு சிறு பின்னடைவு ஏற்பட வாய்ப்புண்டு. அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படலாம். பெண்களுக்கு கர்ப்பப்பை தொடர்பான நோய்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. உரிய நேரத்தில் உரிய சிகிச்சை எடுத்து நோய் முற்றிவிடாமல் கவனித்துக் கொள்ள வேண்டும். எந்த நோயின் அறிகுறி தென்பட்டாலும் உடனடி சிகிச்சை தேவை. செலவுகள் அதிகமாகலாம். பண கொடுக்கல் வாங்கலில் மிகவும் எச்சரிக்கை தேவை. வீண் விவாதம் கூடாது. பேச்சில் எச்சரிக்கை தேவை. சட்டபூர்வமான செயல்களில் ஈடுபடுவதன் மூலம் நன்மை ஏற்படலாம். சிறு தவறும் பெரிதாகிவிடும். தேவையில்லாத பகை உணர்வு, தேவையற்ற விரோதம், காரணம் இல்லாமல் சிலர் கோபிப்பார்கள். செலவு கட்டுக்கடங்காமல் போகும். திருமண வயதிலிருப்பவர்களுக்கு திருமணம் தாமதமாகும் அல்லது வேறு சில பிரச்சினைகள் தோன்றி பாதிக்கப்படும். குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்படும். முறை தவறிச் செல்லவும் இடமுண்டு. மாணவர்கள் கல்வியிலே கவனச்சிதறல் ஏற்பட வாய்ப்புள்ளது. வேறு விடயங்களில் கவனம் கூடாது.

ராகு இவ்வருடமும் லாபம் மூத்த சகோதர தானமான 11இல் நிற்பதால் பல வழிகளில் கஸ்டம் ஏற்படும். செய்தொழிலில் மந்த நிலை ஏற்படும். வரவு தாமதமாகக் கிட்டும். வீடு, வாகனம், பயிர், நிலம் என்பவற்றால் தொல்லை ஏற்படும். அன்னியத் தொடர்பு ஏற்படும். அன்னிய தேச பொருட்கள் கிட்டும். சேமிப்பு குறைவடையும். தீய வழியில் செலவு அதிகமாகும். மூத்த சகோதரத்துக்கு தொல்லைகளையும் பொருள் செலவும், வீண் அலைச்சலும், கவலையும் சுகக் குறைவும், மரண பயமும், விஷ பயம் உண்டாகும்.

கேது இவ்வருடமும் புத்திரர், மாமன் தானமான 5ல் தொடர்ந்து நிற்பதால் செய்தொழிலில் பல தொல்லைகளும், கவலைகளும் இருந்தாலும் ஆதாயம் இல்லாமல் போகாது. பொருளாதாரம் மேன்மை அடையும். மேலதிகாரிகளின் ஆதரவு கிட்டும். அவ்வப்போது ஏற்படும் அலைச்சலால் வேளைக்கு சாப்பாடு உண்ண முடியாமல் போகலாம். கணவன் மனைவி உறவில் மகிழ்ச்சி குறைவாகக் காணப்படும். புத்திரரின் உடல் ஆரோக்கியம் குறைவடையும். புத்திரர்கள் பற்றிய கவலை ஏற்படும். புத்திரர்களை எதிர்கொள்வோருக்கு

தாமதமாகும். மாமனுக்குத் தொல்லைகளையும் பொருள் செலவும் வீண் அலைச்சலும் கவலையும் சுகக்குறைவும் மரண பயமும் விஷபயமும் உண்டாம்.

இதுவரையும் குரு, சனி, ராகு, கேது என்பவற்றின் தனித்தனி மாற்றபலனை அறிந்த நீங்கள் இவை நான்கு பலனும் எப்படி இருக்கும் என்று பார்ப்போம். அட்டமத்துச் சனியுடனேயே வருஷம் பிறக்கின்றது. வியாழ சுகமும் சிறப்பாக இல்லை. குடும்பத்தில் கருத்து வேற்றுமையால் சச்சரவுகள் தோன்றும். உழைப்புக்கேற்ற வருவாய் கிடையாது. நண்பர்கள் கூட பகைமை சாதிப்பார்கள். கடன் தொல்லைகளும் தலைதூக்கும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானமாக இருக்கவும். உத்தியோகத்தர்களுக்கு வசதி குறைந்த இடமாற்றங்கள் கிட்டும். அதிகாரிகளுடன் பிணக்குகள் தோன்றலாம். பொறுமையைக் காப்பது நன்று. வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்த நிலையிலேயே இருக்கும். கடன் பழு அதிகரிக்கும். மங்கல கருமங்கள் தாமதமடையும். சனி, வியாழன் வழிபாடு செய்க. மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் தேவை.

15.11.2011இல் சனி 9க்கு வருவதால் அட்டமத்துச் சனி விலகுவதால் கஸ்டங்கள் குறைவு. பல நன்மைகள் கிட்டும். பூர்வீக சொத்துக்களால் கஸ்டம் ஏற்படும். தந்தை வழியில் கஸ்டம் ஏற்படும். சுகக்குறைவு ஏற்படும். செலவுகள் ஏற்படும்.

## ***மீனராசி***

**(பூரட்டாதி 4ம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)**

துணிச்சலான செயல்களை நம்பிக்கையுடன் செய்து வெற்றி பெறுவதுடன் சகலரது நலனுக்காகவும் கடவுளிடம் பிரார்த்தனை செய்யும் பண்பு கொண்ட மீனராசி அன்பர்களே! இவ்வருடம் குரு தனம், வாக்கு, வித்தை தானமான 2இல் 08.05.2011இல் வருவதால் முன்னர் இருந்த கஸ்டங்கள் நீங்கி நற்பலன் கிட்டும். வருமானம் பெருகும். தொழில் ஸ்திரத்தன்மை இருக்கும். முன்னேற்றங்கள் ஏற்படும். உடல் ஆரோக்கியம் அதிகரிக்கும். இதுவரை இருந்த வந்த நோய்கள் மாயமாக மாறும். கடன் வந்து சேரும். மரணபயம் நீங்கும். பொருள் வரவு நன்றாக அமையும். தடைப்பட்ட வரவு கிட்டும். கஸ்டங்கள் நீங்கும். குடும்பத்தில் மங்களகரமான நிகழ்ச்சிகள் நடைபெறும். புதிய ஜீவன் ஒன்று குடும்பத்தில் தோன்றும். நண்பர்கள் உதவியும் ஏற்படும். விரோதிகள் நண்பர்களாவர். பழைய உறவு வந்து சேரும். கணவன் மனைவி உறவில் மகிழ்ச்சிகரமாக இருக்கும். பேச்சில் நீதி நியாயங்கள் காணப்படும். சகலருடனும் அன்பாக இருப்பார்கள். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். கல்வியால் பெருமை கிட்டும். ஆரம்பக் கல்வி மிக நன்றாக அமையும்.

இவ்வருடமும் சனி களத்திரதானமான 7ல் தொடர்ந்து நிற்பதால் குடும்பத்தில் சலசலப்பு ஏற்படும். சொந்த பந்தங்கள் எதிரும் புதிருமாக இருப்பார்கள். உற்றார் உறவினருடன் ஒற்றுமை ஏற்பட வாய்ப்பில்லை கடுமையான உழைப்பினை செலவிட வேண்டி வரும். செய்தொழிலுக்கு இடையூறுகள் வந்து சேரும். வெளியூர்ப் பிரயாணங்கள் அடிக்கடி ஏற்படும். ஆனால் அதிக நன்மைகள் ஏற்படாது. வயிற்றுவலி, மூட்டுவலி, எலும்புவலி, கழுத்து வலி, தைராய்ட்டுப் பிரச்சினை ஏற்படும். கெட்ட சகவாசம் ஏற்படும். அதனால் வீண் கவலை ஏற்படும். குடும்பத்தில் உடல் நிலை பற்றிய கவலை இருந்து வரும். எச்சரிக்கையுடன் இருந்தால் பெரிய ஆபத்தைத் தடுக்கலாம். மணவாழ்க்கை எதிர்கொள்வோருக்கு மணவாழ்க்கை தாமதமாகும். அல்லது நிச்சயிக்கப்பட்ட குறிப்பிட்ட மாதத்தில் குறித்த திகதியில் நேரத்தில் திருமணம் நடைபெற முடியாதவாறு ஒரு சில பிரச்சினைகள் தோன்றும். குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்படும். முறை தவறிச் செல்லவும் இடமுண்டு. புத்திர பாக்கியம் தாமதமாகும், தள்ளிப்போகும். தாய், தந்தை உடல் நலம் பாதிக்கப்படும். வீடு, வாகனம், சொத்து, சம்பந்தமான பிரச்சினைகளைத் தரும். அதிக செலவுகள் ஏற்படும்.

ராகு தொழில்த்தானமாக 10ல் தொடர்ந்தும் நிற்பதால் செய்தொழிலில் பாதிப்பு ஏற்படும். மேலதிகாரிகள் சீற்றத்துக்கு ஆளாகவேண்டி வரும். வீண் கெட்ட பெயர், இடமாற்றம் ஏற்படும் அல்லது தொழில் மாற்றம் ஏற்படும். பொருளாதாரம் பாதிக்கப்படும். வாழ்க்கை முன்னேற்றம் ஏற்படும். அன்னியபொருள் சேரும். கணவன் மனைவி ஒற்றுமை ஏற்படும். குடும்ப உறவு நன்றாக அமையும். ஆடம்பர செலவுகளை குறைத்தல் நன்று.

கேது இவ்வருடமும் தொடர்ந்து தாய் சுகத்தானமான 4இல் நிற்பதால் பெற்றோர்கள் உடல்நிலை பாதிக்கப்படும். தாய்க்கு சுகக்குறைவு ஏற்படும். அவர்கள் மூலம் பணவிரயம் ஏற்படும். வீடு, வாகனம், நிலம், பயிர் என்பன துன்பம் தரும். சுகங்கள் பாதிக்கப்படும். செய்தொழில் மந்தம் ஏற்படும். பொருளாதார தட்டுப்பாடு, கடன் தொல்லையும் தலைக்கு மேல் போகும். வீண் அலைச்சல் அவமானமும் உண்டாகும். கணவன் மனைவியிடையே மனவேற்றுமை இருக்காது. மாணவர்கள் கல்வியில் பின்னடைவு ஏற்படும். மத்திய கல்வியில் கூடிய கவனம் தேவை.

இதுவரையும் குரு, சனி, ராகு, கேது என்பவற்றின் தனித்தனி மாற்றபலனை அறிந்த நீங்கள் இவை நான்கு பலனும் எப்படி இருக்கும் என்று பார்ப்போம். இவ்வருடம் மத்திய பலன்களே நடக்கும். குடும்பத்தவர்களுக்கு வருட முற்பகுதி ஓரளவு நன்று. தேகசுகம், குடும்ப சுகம் ஓரளவு நன்று. வருவாயும் செலவும் சமமாக இருக்கும். பிள்ளைகளால் உதவி கிடையாது. இடையிடையே மருத்துவச் செலவும் ஏற்படும்.

15.11.2011இல் அட்டமத்துச் சனி ஆரம்பிப்பதால் பல விதமான தீமைகள் எற்படும். வாழ்க்கை கஸ்டம் நிறைந்ததாகக் காணப்படும். தேகசுகம் பாதிக்கப்படும். குடும்பநிலை கஸ்டமாகக் காணப்படும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் அதிகாரிகளுக்கேற்ப செயற்பட வேண்டும். வருட பிற்பகுதியில் வசதியற்ற இடமாற்றங்கள் ஏற்படலாம். பதவி உயர்வு கிடையாது. வியாபாரிகளுக்கு வருட முற்பகுதியில் தொழில் நன்றாக நடக்கும். எனினும் முதலீடுகளுக்கு சிறப்பில்லை. மண மங்கல கருமங்கள் தள்ளிப்போகும். மாணவர்களுக்கு பிற்பகுதி கஸ்டமாகவே இருக்கும்.

**திருக்கணிதப்படி / வாக்கியப்படி**

| | ஆதாயம் | விரயம் | |
|---|---|---|---|
| மேடம் - விருச்சிகம் | 5 | 11 | நட்டம் |
| இடபம் - துலாம் | 14 | 2 | அதிகலாபம் |
| மிதுனம் - கன்னி | 2 | 2 | சமசுகம் |
| கர்கடகம் | 2 | 8 | நட்டம் |
| சிங்கம் | 14 | 8 | அதிகலாபம் |
| தனுசு - மீனம் | 8 | 2 | லாபம் |
| மகரம் - கும்பம் | 11 | 11 | சமசுகம் |
| | 56 | 44 | தேசத்தில் சுகம் செல்ல விருத்தி |

**இதுவரை காலமும் பிறந்த சாதகம், பிறந்த தினத்தில் குடும்பப் பலன், பூப்படைந்த சாதகம், பூப்படைந்த பலன் நிவர்த்தி, பெயர்க்குறிப்பு, பெயர், கிரகதோஷம், கிரகசாந்தி, திருமணப் பொருத்தம், சுபநாள், கிருகாரம்பம், திருமணப்பிரச்சினை, புத்திரபாக்கியம், கல்வி, நோய், கருத்துவேறுபாடு என்பன சம்பந்தமாக ஆலோசனை பெற்ற உங்களுக்கு இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதோடு இம்முறை வீடு சம்பந்தமான ஆலோசனையும் பெற்றுக் கொள்வதுடன் குறும் செய்தி** (SMS) **மூலமாக தகவல்களை அறிவிக்கவும் தகவல் பெறவும் வசதி செய்யப்பட்டுள்ளது.**

**நன்றி**

"ஜெய் சாயிராம்"